கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண்.12/2025**
அதன்
**அசல் வழக்கு எண்.372/2022**
( CNR No.TNTS01 001199 2022)

1. பி.எல்.ஜெகநாதன்
2. ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிட்
அதன் இயக்குநர் பி.எல்.ஜெகநாதன்

3. ஜெயர்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிட்
அதன் இயக்குநர் ஜெ.லெட்சுமணன் ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

..எதிர்..

பி. சுப்பையா ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த இடைநிலை மனுவானது 25.06.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி. முருகமுரளிதரன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சுந்தரேசன் அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவு

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 18 பிரிவு 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ், அசல் வழக்கில் ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.2–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்திட உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**மனுவின் சுருக்கம்**</u>:–

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கில் சங்கரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியாரை இந்த நிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியங்கள் முடிவுற்று இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. வா.சா.2 –ஐ இந்த மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது சில முக்கிய கேள்விகள் கேட்க விடுபட்டு போய்விட்டது. மேற்படி தவறுகை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே வா.சா.2–ஐ இந்த மனுதாரர்கள் தரப்பில் மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**எதிருரையின் சுருக்கம்**</u>:–

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. அசல் வழக்கின் விசாரணை விரைந்து முடித்திட வேண்டுமென்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவின்படி அசல் வழக்கானது உடனடியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த மனுதாரர்கள் தரப்பில் வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விடுபட்டுப்போன சங்கதிகளை நிரப்புவதற்காகவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.2–ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எந்தவிதமான தெளிவுபடுத்தப்பட வேண்டிய சங்கதிகளும் இல்லை. எனவே மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"இம் மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>**பிரச்சனைக்கான தீர்வு**</u>:–

இந்த மனுவின் மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர்கள் அசல்

வழக்கில் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கில் சங்கரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படியாரை இந்த நிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது இந்த எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியங்கள் முடிவுற்று இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளதாகவும், வா.சா.2 –ஐ இந்த மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது சில முக்கிய கேள்விகள் கேட்க விடுபட்டு போய்விட்டதாகவும், மேற்படி தவறுகை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே வா.சா.2–ஐ இந்த மனுதாரர்கள் தரப்பில் மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில், அசல் வழக்கின் விசாரணை விரைந்து முடித்திட வேண்டுமென்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவின்படி அசல் வழக்கானது உடனடியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இந்த மனுதாரர்கள் தரப்பில் வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், விடுபட்டுப்போன சங்கதிகளை நிரப்புவதற்காகவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் வா.சா.2–ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எந்தவிதமான தெளிவுபடுத்தப்பட வேண்டிய சங்கதிகளும் இல்லை என்றும், எனவே மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

8. இரு தரப்பு வாதமும், வழக்காவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது புரோநோட்டின்பேரில் இந்த 1, 2 மனுதாரர்கள், எதிர்மனுதாரரிடம் பெற்ற தொகையை மேற்படியார்களிடமிருந்து வசூலிப்பதற்காக எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் மனுதாரர்கள் தரப்பில், வா.சா.1–ன் குறுக்கு விசாரணையின்போது கேட்காமல் விடுபட்டுப்போன சில முக்கியமான கேள்விகளை கேட்க வேண்டியுள்ளதால் வா.சா.2 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்கவேண்டியது அவசியமானது என்பதால், பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள அசல் வழக்கினை மறுதிறப்பு செய்து வா.சா.2 ஐ மீண்டும்

அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 2022 ஆம் ஆண்டு இந்த நிர் 1, 2 மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 3 வது மனுதாரரை கட்சியாக சேர்க்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படியார் 3 வது பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டு வழக்கின் பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டு, 3 வது பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு வா.சா.2–ன் குறுக்கு விசாரணையும் முடிவு பெற்றுள்ளது. மேலும், அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு தபசில் சொத்தைப் பொறுத்து தீர்ப்புக்கு முன் ஜப்தி கோரி இடைநிலை மனு எண்.2/2022 தாக்கல் செய்ததில், மேற்படி மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதன்பேரில், எதிர்மனுதாரர் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு எண்.CRP (MD) No.1798/2024 and CMP(MD) No.10195/2024–ல் 01,08,2024 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது உறுதி செய்யப்பட்டிருந்தபோதிலும், அசல் வழக்கினை விரைந்து விசாரணை மேற்கொண்டு முடித்திட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது என்பது மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் மூலம் தெரியவருகிறது. மேற்படி உத்தரவின் அடிப்படையிலேயே இந்த அசல் வழக்கானது விசாரணைக்கு உடனடியாக எடுக்கப்பட்டு விரைந்து விசாரணையும் நடைபெற்று வருகிற நிலையிலும், வா.சா.2–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வதற்கான சரியான முகாந்திரம் எதுவும் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்படாத நிலையிலும், இந்த மனுவை இச்சூழ்நிலையில் அனுமதிப்பதன் மூலம் வழக்கின் விசாரணையில் காலதாமதம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு அனுமதிக்கக் கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Date: 2025.07.30 10:25:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**இல்லை**

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S
Date: 2025.07.30 10:26:03 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**தென்காசி**

-----------------------------------

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.12/2025
அதன்
அசல் வழக்கு எண்.372/2022
உத்தரவு (நேரிய)
நாள்: 29.07.2025

-----------------------------------